අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref.: ED/04/60/01/15/VI (වැටුප්) 4 – II වෙළුම
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.:
දිනය / திகதி / Date: 2026.10.

சுற்றறிக்கை இலக்கம்: 16 /2017 (II)

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும்,
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,

**2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு அமைவாக அதிபர்களுக்கு வழங்கப்படும் விசேட மாதாந்தத் தற்காலிகக் கொடுப்பனவைத் திருத்தம் செய்தல்.**

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் 16/2017 (I) ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் (2026.04.27 ஆம் திகதியுடைய) மூலம் திருத்தம் செய்யப்பட்ட இலங்கை அதிபர் சேவையின் அதிபர்களுக்கு வழங்கப்படும் விசேட கொடுப்பனவானது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அதனை 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் செலுத்துவதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் இணக்கப்பாடு கிடைத்துள்ளது.

02. அதற்கமைய, மேற்படி சுற்றறிக்கையின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட கொடுப்பனவை 2026.01.01 ஆம் திகதி முதல் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், அதற்கமைய உத்தியோகத்தர்களுக்குரிய நிலுவைத் தொகையை 2026.12.31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி முடிக்குமாறும் தயவுடன் அறியத் தருகின்றேன்.

03. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் 16/2017 (I) ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் ஏனைய உறுப்புரைகள் மாற்றமின்றித் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்பதையும் இதனால் மேலதிகமாக அறிவிக்கிறேன்.

04. இது தொடர்பில் தங்களால் வழங்கப்படும் ஒத்துழைப்பை பெரிதும் மதிக்கிறேன்.

நாலக களுவெ
செயலாளர்

பிரதிகள் :

01. கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம். – தகவலுக்காக
02. திறைசேரியின் பிரதிச் செயலாளர், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு - தகவலுக்காக
03. தாபனப் பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - தகவலுக்காக.
04. பிரதான நிதி அதிகாரி (ED/05/77/12/ පොදු (2026) – கோவைக்குரியது) - தகவலுக்காக

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk
moesecretaryoffice@gmail.com